[1995 ஏப்ரல் 6

254—

ஆரணி தொகுதியில் சிப்காட் தொழிற்சாலை வளாகம் அமைத்தல்.

***36233**—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:*

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதியில் சிப்காட் தொழிற்சாலை வளாகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செய்யாறு வட்டம், செய்யாறு - காஞ்சிபுரம் சாலையில் ரூ.17.80 கோடி திட்ட மதிப்பீட்டில் முதற்கட்டமாக சுமார் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு சிப்காட் வளாகம் அமைக்க அரசு 13-1-1995-ல் ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதியில் மேலும் ஒரு சிப்காட் வளாகம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

முற்பகல் 10.50

திரு. ஆ. தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியைப் பற்றிய கேள்வியாக இருந்தாலும் சிப்காட் என்ற ஒன்று வந்திருக்கின்ற காரணத்தினாலே அமைச்சர் அவர்களிடத்திலிருந்து மேலும் பதில்களை எதிர்பார்க்க வேண்டும் என்ற முறையிலேதான் இந்தக் கேள்வியை இப்போது கேட்கின்றேன். செய்யாறு தொகுதிக்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அவர்கள் 600 ஏக்கர் நிலப்பரப்பில் 18 கோடியில் சிப்காட் அமைப்பதற்கு உரிய ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டே 2, 3 மாதத்திற்குள் கால்கோள் விழா நடத்துவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்யாறு வட்டத்தில் அமைக்கப்பட இருக்கிற சிப்காட் தொழில் வளாகத்திற்கு இப்போது அரசு ஆணைப் பிறப்பித்து நில ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, அந்த நிலச் சொந்தக்காரர்களை அழைத்துப் பேசுவதற்குண்டான முயற்சியில் அரசு ஈடுபட்டு உள்ளது. அதற்குரிய முழு ஒத்துழைப்பையும் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைப்பைக் கொடுப்பார்களானால் அவர் குறிப்பிட்ட தேதிக்கு முன்னாலேயே அந்தப் பணி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்களுடைய கேள்வி. அதனால் உங்களுக்கு துணைக் கேள்வி ஒன்று தான்.

வினா எண் 255, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

255—

கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்

***26072**—திரு. கு. சிவசுப்பிரமணியன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடியில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நல்ல தரமான உற்பத்தியை செய்து கொடுத்தால், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியைப் பெருக்குகின்ற அளவுக்கு வகையான துணிகளை உற்பத்தி செய்து கொடுத்தால் அரசு ஏற்றுமதி செய்வதற்கு முன்வரும்.